நகர்மன்றம்
உதகமண்டலம்
-01-2019.

அன்புடையீர்,

வணக்கம். இந்நகராட்சியின் ஜனவரி **–01–2019–**ம் மாத சாதாரணக்கூட்டம் வருகிற அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட **36** வார்டுகளிலும் உள்ள வரி விதிப்புகளுக்கு சொத்துவரி பொது சீராய்வு கணினியில் **14000** பதிவுகளை பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளதால், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் நேர்முக கடிதத்தில் சொத்துவரி சீராய்வு கணினியில் பதிவேற்றும் பணி **25.01.2019**ம் தேதிக்குள் முடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் வருவாய் பிரிவில் போதிய கணினி வசதி இல்லாததாலும், இணையதள வசதி (Network) அடிக்கடி தடைப்படுவதாலும், மேற்கண்ட பணி குறித்த நேரத்தில் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனவே இப்பணியினை விரைந்து முடிக்க தனியார் மூலம் (Outsourcing) பணியினை மேற்கொள்ள விலைப்ளுள்ளி கோரப்பட்டதில் பட்டியலில் கண்டவாறு விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் பட்டியலில் கண்டவாறு விலைப்புள்ளி பெறப்பட்டது.

பட்டியல்

| SS Computer | Oscar Institute | Sai Computers |
|---|---|---|
| 4.50 | 6.60 | 7.15 |

பட்டியலில் குறைந்த விலைப்புள்ளி சமர்பித்துள்ள திருவாளர்.S.S.Computer அவர்களது விலைப்புள்ளிக்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.7237/2018/A1)**

**தீர்மானம் எண்: 1223 அனுமதி வழங்கப்பட்டது.**

**2.** இந்நகராட்சிப்பகுதிக்குட்பட்ட வார்டு எண். **30–**ல் அமைந்துள்ள ஆர்.கே.புரம் நகராட்சி நடுநிலைப்பளிளியின் பின்புறம் அமைந் துள்ள பகுதியில் பாதுகாப்பு சுவர் இல்லாத காரணத்தால் பள்ளி வளாகத்திற்குள் ஆடு, மாடுகள் மற்றும் சமூக விரோதிகல் நுழைந்து பள்ளியை அசுத்தம் செய்வதுடன் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதால் மாணவர்களுக்கும் பள்ளிக்கட்டிடத்திற்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உள்ளது. எனவே நகராட்சி பள்ளியின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அப்பள்ளிக்கு சுற்றுசுவர் அமைத்து பள்ளியை பாதுகாக்கும் படி பொதுமக்களும் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று பள்ளியின் பின்புறம் சுற்றுசுவர் அமைக்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**17.00** லட்சத்திற்கு மன்றத்தில் பொருள் வைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்கண்ட பணியை நகராட்சி கல்வி நிதியில் மேற் கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு:–**

1. **அனுமதி வழங்கலாம்.**

**2. மேற்கண்ட பணியை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.**

**தீர்மானம் எண்: 1224 அனுமதி வழங்கப்பட்டது.**

**3.** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 245, 249, 254 258, 269, 285–ன்படி உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தொழில் நடத்தும் இனங்களுக்கு D & O (அச்சம் மற்றும் அருவரக்கத்தக்க உரிமம் கட்டணம்) மற்றும் சேவை கட்டணம் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒரு முறை 30% வீதம் உயர்த்தப்பட வேண்டும் என பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2018 – 2019–ம் ஆண்டு D & O கட்டணம் உயர்த்தப்பட நகர மன்ற தீர்மான எண்.1084 நாள்.30–10–2018 மற்றும் நகர மன்ற தீர்மான எண். 1085–ன் படி பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தினபூமி நாளிதழில் 20–12–2018 தேதி அன்று பிரசுரம் செய்யப்பட்டது நாளது வரை தனிநபர், பொதுமக்கள், மற்றும் சங்கங்கள் ஆகியோரிடம் எவ்வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை.

எனவே தொழில் நடத்தும் இனங்களுக்கு D & O (அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க உரிமம் கட்டணம் மற்றும் சேலைக் கட்டணம் உத்தேசிக்கப்பட்ட கட்டணம் அரசிதழில் (Gazzate) வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1225 அனுமதி வழங்கப்பட்டது.**

**4.** பொது நலப்பிரிவில் இயங்கிவரும் வாகனங்களுக்கு 10,000 கிலோ மீட்டர் முடிவடைவதால் கீழ்கண்ட எண் கொண்ட வாகனங்களுக்குக் TN43J4653, TN43J4673, TN43J4649, TN43J4651, TN43J46817, TN43J4689, TN43J4666, TN43J4660, TN43J4657, TN43J4674, ஆகியவைக்கு இஞ்சின் சர்வீஸ் மற்றும் சில பழுதுபணிகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டியுள்ளதால் திருவாளர்.அம்மன் ஆட்டோ பிரைவேட் லிமிடெட் உதகை அவர்களுக்கு பணி செய்ய உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்காகும் உத்தேச செலவினத்திற்கு ரூ.50,000/– மன்ற அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1226 அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** இந்நகராட்சியில் சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பக் கட்டணமாக ரூ.100/–ம் பதிவுக் கட்டணமாக ரூ.50/–ம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்நேர்வில் சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணம் எதுவும் இந்நகராட்சியில் இதுவரை பெறப்படவில்லை என தணிக்கைத் துறையினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி தணிக்கை துறையின் ஆலோசணையின் படி சொத்துவரி பெயர்மாற்றத்திற்கு பெறப்படும் பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரத்தின் படி அதில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டி மதிப்பின் படி ஒரு இலட்ச ரூபாய் மதிப்பிற்கு ரூ.100/– என்ற அடிப்படையில் பெயர் மாற்றக் கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சியில் 01.02.2019 முதல் சொத்துவரி பெயர் மாற்ற விண்ணபத்திற்கு மேற்கண்ட மதிப்பின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரத்தின் படி அதில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டி மதிப்பின் படியும், ஒரு இலட்சத்திற்கு ரூ.100/– வீதம் பெயர் மாற்ற கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். 11508/2018/A1)**
**தீர்மானம் எண்: 1227 அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் அனைத்து வழக்குகளுக்கும் நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்து நடவடிக்கை தொடர்ந்திட இந்நகராட்சியின் சட்ட ஆலோசகராக திரு.P. ஸ்ரீனிவாஸ், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை நியமிப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
**அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண். சி1/564/2019)**
**தீர்மானம் எண்: 1228 அனுமதி வழங்கப்பட்டது.**

**7.** இந்நகராட்சிக்கு உட்பட்ட எட்டின்ஸ் சாலை மற்றும் ரோஜா பூங்கா சாலை சந்திப்பு மற்றும் எட்டின்ஸ் சாலையில் இருந்து ரோஜா பூங்கா செல்லும் சாலை ஆகியவை மழையினால் மிகவும் பழுதடைந்து உள்ளதால் இச்சாலை வழியாக வாகனங்கள் அதிக அளவில் ரோஜா பூங்காவிற்கு செல்வதால் மிகவும் சிரம்மமாக உள்ளது. மேலும் மேற்கண்ட இடத்தில் தார்சாலை மழையினால் பழுதடைந்து உள்ளதால் எட்டின்ஸ் சாலையில் அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் மேற்கண்ட சாலைகள் வழியாக கோடை சீசன் காலங்களில் மிக அதிக அளவில் வாகனங்கள் செல்லும் போது, சாலையானது பழுதடைந்து உள்ளதால் மிக அதிக அளவில் எட்டின்ஸ் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே மழையினால் பழுதடைந்த தார்சாலையினை Paver Block கற்கள் கொண்டு புதுப்பிக்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
**அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் எண்: 1229 அனுமதி வழங்கப்பட்டது.**

**8.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட NGM சாலையில் பாரதியார் காம்ப்ளக்ஸ் முதல் தடுப்புசுவற்றின் மேல் அலங்கார கிரில் (Grill) அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் சில இடங்களில் கிரில்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள கிரில்களை புதுப்பித்து வர்ணம் பூச தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.23 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
**அனுமதி வழங்கலாம்.**
**தீர்மானம் எண்: 1230 அனுமதி வழங்கப்பட்டது.**

**9.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் **28.09.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **9**–ல் கீரீன் பீல்டு பகுதியில் பிலோமினா தொடக்க பள்ளி அருகில் உள்ள கல்வெர்ட் பழுதுபார்க்கும் பணி. | 2.25 | 1.திரு.S.R.ரவிகுமார் தொகை ரூ.**191428.81** சதவீதம் **0.03** % (–) குறைவாக.<br>2.திரு.R. நந்தகுமார் தொகை ரூ.**192656.42** சதவீதம் **0.61** % (+) அதிகமாக. | 1 திரு.S.R.ரவிகுமார் தொகை ரூ.**191428.81** சதவீதம் **0.03** % (–) குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1231 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**10.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட விட்டோபா கோயில் தெரு பகுதியில் மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளதால் மழைநீர் நடைபாதையில் வழிந்தோடுவதால் பொதுமக்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும் மழைநீர் நடைபாதையில் தேங்கி நிற்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாய் புதுப்பித்து கவர் சிலாப் மற்றும் பேவர் பிளாக் கொண்டு சாலையை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**4.95** இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1232 அனுமதி வழங்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஹோபர்ட் பார்க் சாலையில் பஸ் நிலையம் முதல் மணிகூண்டு (தென்றல் ஹோட்டல்) வரை மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளதால் தண்ணீர் தார் சாலையில் செல்வதோடு தார் சாலையும் ஆங்காங்கே பழுதடைந்துள்ளது. இதனால் பள்ளி குழந்தைகள், பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுவதோடு சுகாதார சீர்கேடு ஏற்படும் வாய்ப்புள்ளது. இச்சாலையானது நகரின் மத்தியில் முக்கியப் பகுதியில் அமைந்துள்ளதால் இப்பணிகளை உடனே மேற்கொள்வது அவசியமானதாகும். மேற்கண்ட இடத்தில் RCC Home Pipe. தொட்டிகள், மற்றும் Paver Block கற்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**10.90** இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி பொதுநிதி / திட்ட நிதிகளில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **அனுமதி வழங்கலாம்.**

**2. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஒப்பந்தப் புள்ளி கோரலாம்.**

**தீர்மானம் எண்: 1233 அனுமதி வழங்கப்பட்டது.**

**12.** இந்நகராட்சியில் வருவாய் பிரிவில் அனைத்து Revision பணிகளுக்கும் கணினி மூலம் பணிகள் நடைபெற உள்ளதால் புதிதாக கணிணிகள் 13 எண்கள் கணிணிகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,90,000/– க்கு பணிகளை நகராட்சி பொது நிதிகிளில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1234 அனுமதி வழங்கப்பட்டது.**

**13.** இந்நகராட்சியில் வருவாய் பிரிவில் கணினிமயமாக்கும் பணிகள் நடைபெற உள்ளதால் இதற்காக கூடுதலாக 5 KVA UPS மற்றும் Wiring பணிகள் மேற்கொள்வது அவசியமானதாகும். எனவே மேற்கண்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.7,50,000/– க்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1235 அனுமதி வழங்கப்பட்டது.**

**14.** நகராட்சி எல்லைக்குட்பட்ட நொண்டிமேடு பகுதியில் உள்ள கிணற்றில் உள்ள மோட்டார்கள் மற்றும் டன்மோரி பகுதியில் உள்ள Changeover Switch ஆகியவை அதிக மின் அழுத்தத்தின் காரணமாக மிகவும் பழுதடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் செய்ய மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் தற்பொழுது அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பழுதடைந்த மோட்டாரை சீர் செய்யவும் Change Over Switch அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,60,000/–க்கு அனுதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி குடிநீர் பணியாக உள்ளதால் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1236 அனுமதி வழங்கப்பட்டது.**

**15.** இந்நகராட்சியின் SADP 18–19 நிதியின் கீழ் 08/01/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகைரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட LIC Junction முதல் Casino Junction வரை 3” dia GI பைப் லைன் புதியதாக அமைக்கும் பணி. | 7.00 | 1.S.R.முரளி குமார், தொகை ரூ.588285/– சதவீதம் 0.086% (–) குறைவாக.<br><br>2.M.K.ஆனந்தகுமார், தொகை ரூ.619177/– | 1.S.R.முரளி குமார், தொகை ரூ.588285/– சதவீதம் 0.086% (–) குறைவாக. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சதவீதம் 5.16% (+) அதிகமாக. | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்**

**தீர்மானம் எண்: 1237 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**16.** நகராட்சி எல்லைக்குட்பட்ட நொண்டிமேடு பகுதியில் விநாயகர் கோயில் முதல் பொக்காபுரம் கோயில் வரை உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில்ல் செல்வதால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் பாதாள சாக்கடை குழாய்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,95,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1238 அனுமதி வழங்கப்பட்டது.**

**17.** நகராட்சி எல்லைக்குட்பட்ட தலையாட்டிமந்து பகுதியில்ல் உள்ள மூலநகர் பகுதியில் போதிய கால்வாய் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் மற்றும் கழிவுநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்வதால் அப்பகுதி மக்களுக்கும் சுகாதார சீர் ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் கழிவுநீர் கால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1239 அனுமதி வழங்கப்பட்டது.**

**18.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 28/11/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகைரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ADB திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மின் விளக்குகள் மாற்றி அமைக்கும் பணி மற்றும் பழுதடைந்துள்ள UG Cable மாற்றி அமைக்கும் பணி. | 9.50 | 1. திருவாளர். Industrial Hard Ware அவர்களின் தொகை ரூ.5,93,550/— (3.64 சதவீதம்) அதிகமாக.<br><br>2. திருவாளர். Lakshmi Narain Stores அவர்களின் தொகை ரூ.5,72,360/— சதவீதம் (— 0.06) குறைவாக. | 1. திருவாளர். Lakshmi Narain Stores அவர்களின் தொகை ரூ.5,72,360/— சதவீதம் (— 0.06) குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :—**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1240 ஏற்று க் கொள்ளப்பட்டது.**

**19.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 28/11/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகைரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகிளில் அமைக்கப்பட்டுள்ள 22 எண்கள் Highmast கோபுரங்களுக்கு உதிரி பாகங்கள் மாற்றி அமைத்தல் மற்றும் சீரமைப்பு பணி மேற்கொள்ளுதல் . | 3.00 | 1.திருவாளர்.Sams Electricals தொகை ரூ.2,61,940/— சதவீதம் (— 0.02) குறைவாக.<br><br>2. திருவாளர்.மோனி Engineering Work தொகை ரூ.2,68,600/— சதவீதம் (2.52) அதிகமாக. | 1. திருவாளர்.Sams Electricals தொகை ரூ.2,61,940/— சதவீதம் (— 0.02) குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :—**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1241 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**20.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 13/11/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36 மஞ்சனக்கொரை மினிக்கி சோலையில் உள்ள எரிவாயு தகனமேடைப் பகுதியில் கழிப்பிடம் கட்டும் பணி. | 9.00 | 1. திரு.P.Vijaragavan தொகை ரூ.7,91,062.02 (–464.83 சதவீதம்) குறைவாக.<br><br>2. திருவாளர். Global Environment System தொகை ரூ.807144.90 (+ 1.97 சதவீதம்) அதிகமாக. | 1. திரு.P.Vijaragavan தொகை ரூ.7,91,062.02 (–464.83 சதவீதம்) குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1242 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**21.** இந்நகராட்சியின் கல்வி நிதியின் கீழ் 28/11/2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பழைய உதகை நகராட்சி பள்ளியினை சுற்றி தடுப்பு சுவர், குடிநீர் வசதி மற்றும் வகுப்புகளில் பழுதடைந்துள்ள தரையினை சீரமைக்கும் பணி. | 20.00 | 1. திருவாளர்.குளோபல் என்விராயின்டென்ட் சிஸ்டம் அவர்களின் தொகை ரூ.15,19,435.21/– (–0.01 சதவீதம்) குறைவாக.<br><br>2. திரு.P.விஜயராகவன், அவர்களின் தொகை ரூ.15,27083,23 (0.50 சதவீதம்) அதிகம். | 1. திருவாளர்.குளோபல் என்விராயின்டென்ட் சிஸ்டம் அவர்களின் தொகை ரூ.15,19,435.21/– (–0.01 சதவீதம்) குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1243 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**22.** உதமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில், 27 வார்டுகளில் பாதாள திட்டம் நடைமுறையில் உள்ளது. எனவே இதனை பராமரிக்கவும் அடைப்புகள் நீக்கம் போன்ற

பணிகள் மேற்கொள்ள போதிய ஆட்கள் பற்றாக்குறை உள்ளது. எனவே தற்சமயம் கூடுதலாக தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்து இப்பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.**644**, நாள்.**31–01–2018** பிப்ரவரி–**2018** முதல் பிப்ரவரி–**2019** வரை ரூ.**16,80,000/–**க்கு அனுமதி அளித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணியாளர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்கொண்ட மதிப்பீடு எதிர்வரும் **22–02–2019** முடிவடைவதால் கூடுதலாக ஓராண்டு காலத்திற்கு ஆகும் செலவினம் தோராயமாக (Include GST) ரூ.**16,80,000/–**க்கு மதிப்பீடு தாயாரிக்கப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

மேலும் கோடை விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் காலதாமதத்தினை தடுக்கவும், இதே விலை விகிதத்தில் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தத்தினை கால நீட்டிப்பு செய்ய மன்ற ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1244 அனுமதி வழங்கப்பட்டது.**

**23.** உதகமண்டலம் நகராட்சியில் பொறியியல் பிரிவு பாதாள சாக்கடை சீரமைப்பு பணிகளில் தற்சமயம் **2** எண்கள் Agitator வாகனம், **2** எண்கள் Desiltman இலகுரக வாகனம் உள்ளது. தற்சமயம் இவ்வாகனங்களை இயக்க போதிய ஓட்டுனர்கள் பற்றாக்குறை உள்ளது. இதனால் அடிக்கடி ஏற்படும் பாதாளச் சாக்கடை அடைப்புகளை உடனடியாக சீர் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே தனியார் ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் ந.க.எண்.**800**, நாள்.**26–03–2018**, தொகை ரூ.**19,80,000/–**க்கு அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்சமயம் எதிர்வரும் மார்ச் **–2019** முடிவடைவதாலும், மேலும் எதிர்வரும் கோடை விழாவினை கருத்தில் கொண்டும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை இதே விலை விகிதத்தில் மேலும் ஓராண்டிற்கு பழைய ஒப்பந்தாரருக்கு அளிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1245 அனுமதி வழங்கப்பட்டது.**

**24.** உதகமண்டலம் நகராட்சியில் எதிர்வரும் **2018–2019–**ல் **100** சதவீதம் வரி வசூலினை எதிர்நோக்கி பொது மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் அறிவிப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே நகராட்சி வாகனத்தில் **1** என் ஒலிபெருக்கி (AHUJA Make) Amplifire, Spealeer அமைக்க தோராய செலவினம் ரூ.**13,000/–**க்கு மன்ற அனுமதி கோரப்படுகின்றது. மேலும் இப்பணிகளை உள்ளூர் விலை புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ளவும், பட்டியல் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1246 அனுமதி வழங்கப்பட்டது.**

**25.** இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ICDS – 22 மையங்கள் உள்ளன. இந்த மையத்தில் உள்ள குழந்தைகளின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு கை கழவும் பழக்கம் மேம்படவும், அனைத்து ICDS களிலும் Wash Basin அமைக்க வேண்டியது அவசியம் ஆகிறது. மேலும் இந்த மையங்களில் அமைக்கப்படும் Wash Basin களுக்கு தேவையான தண்ணீர் வழங்க தேவையான குழாய்கள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட

பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.50** இலட்சத்திற்கு கல்வி நிதியின் கீழ் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1247 அனுமதி வழங்கப்பட்டது.**

**26.** இந்நகராட்சியின் SADP 18–19 நிதியின் கீழ் **08/01/2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகைரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **1** | பார்சன்ஸ் வேரி குடிநீர் திட்டத்தில் Bil Circut Breakor ஐ Air Cirucut Breakor ஆக மாற்றி அமைக்கும் பணி. | **13.00** | **1.** திரு.M/S.ALCHEM INDUSTRIES தொகை **1145000/–** சதவீதம் **0.36%** குறைவாக.<br><br>**2.** M/S.R.V ELECTRONICS தொகை ரூ.**1180000/–** சதவீதம் **2.69%** (+) அதிகம். | **1.** திரு.M/S.ALCHEM INDUSTRIES தொகை **1145000/–** சதவீதம் **0.36%** குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1248 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**27.** இந்நகராட்சியின் SADP 18-19 நிதியின் கீழ் **08/01/2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகைரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **1** | உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட HADP Tribal Center முன்புறத்தில் கழைநீர் கால்வாய் அமைக்கும் பணி. | **10.00** | **1.** S.நாகராஜ் தொகை ரூ.**883701.71** சதவீதம் **0.02%(–)** குறைவாக.<br><br>**2.** K.E.கிருஸ்ணதாஸ் தொகை ரூ.**89939/–** சதவீதம் **1.75%** (+) அதிகமாக. | 1. S.நாகராஜ் தொகை ரூ.**883701.71** சதவீதம் **0.02%(–)** குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1249 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**28.** இந்நகராட்சியின் SADP 18-19 நிதியின் கீழ் **08/01/2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகைரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட மேல் கோடப்பமந்து ஏரியில் புதியதாக பம்பு அறை கட்டுதல் மற்றும் நீர் மூழ்கி மின் மோட்டார் அமைக்கும் பணி. | **5.00** | 1. N.அர்ஜீன் தொகை ரூ.**441894/–** சதவீதம் 0.02% (–) குறைவாக.<br><br>2. S.நாகராஜ் தொகை ரூ.**461360/–** சதவீதம் 4.40% (+) அதிகமாக. | 1. N.அர்ஜீன் தொகை ரூ.**441894/–** சதவீதம் 0.02% (–) குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1250 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**29.** இந்நகராட்சியின் SADP 18-19 நிதியின் கீழ் **22/01/2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகைரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட தாவரவியல் பூங்கா முதல ஆம்ர்டு போர்ஸ் ஆபிஸ் ஜங்சன் வரை தார் சாலை அமைக்கும் பணி. | **46.00** | 1. M/S.முரளி & Co தொகை ரூ.**3984929/–** சதவீதம் **0.02%** (–) குறைவாக.<br><br>2. K.E.கிருஸ்ணதாஸ் தொகை **39911550/–** சதவீதம் **0.148%** (+) அதிகமாக. | 1. M/S.முரளி & Co தொகை ரூ.**3984929/–** சதவீதம் **0.02%** (–) குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1251 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**30.** இந்நகராட்சியின் SADP 18-19 நிதியின் கீழ் 08/01/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகைரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பார்சன்ஸ் வேலி 2 MGD குடிநீர் திட்டதில் Oil Circut Breaker ஐ Air Circuit Breaker ஆக மாற்றி அமைக்கும் பணி. | 15.00 | 1.M/S.ALCHEM INDUSTRIES தொகை ரூ.1320000/– சதவீதம் 0.29% (–) குறைவாக.<br><br>2. R.V.ELECTRICALS தொகை ரூ.1350000/– சதவீதம் 1.98% (+) அதிகமாக. | 1.M/S.ALCHEM INDUSTRIES தொகை ரூ.1320000/– சதவீதம் 0.29% (–) குறைவாக. |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**ஏற்கலாம்.**

**தீர்மானம் எண்: 1252 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**31.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் வாகனங்களுக்கு டையர்கள், மின்கலபெட்டி வாங்க் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர், ரூ. 7,98,965/–
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். ரூ. 8,04,000/–

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1253 அனுமதி வழங்கப்பட்டது.**

**32.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H5089 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர், ரூ. 98,565/–
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். ரூ. 1,07,810/–

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1254 அனுமதி வழங்கப்பட்டது.**

**33 .** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43 H5020 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர், ரூ. 98,565/–
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். ரூ. 1,07,810/–

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1255 அனுமதி வழங்கப்பட்டது.**

**34.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H5067 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர், ரூ. 98,565/–
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். ரூ. 1,07,810/–

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1256 அனுமதி வழங்கப்பட்டது.**

**35.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H5054 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்
   ஒர்க்ஸ் ஷாப் கார்னர், **ரூ. 98,565/–**
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஒர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். **ரூ. 1,07,810/–**

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1257 அனுமதி வழங்கப்பட்டது.**

**36.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H5008 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்
   ஒர்க்ஸ் ஷாப் கார்னர், **ரூ. 98,565/–**
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஒர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். **ரூ. 1,07,810/–**

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1258 அனுமதி வழங்கப்பட்டது.**

**37.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H5081 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்
   ஒர்க்ஸ் ஷாப் கார்னர், **ரூ. 98,565/–**
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஒர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். **ரூ. 1,07,810/–**

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1259 அனுமதி வழங்கப்பட்டது.**

**38.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H4991 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர், **ரூ. 98,565/–**
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். **ரூ. 1,07,810/–**

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1260 அனுமதி வழங்கப்பட்டது.**

**39.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H5049 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர், **ரூ. 98,565/–**
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். **ரூ. 1,07,810/–**

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1261 அனுமதி வழங்கப்பட்டது.**

**40.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H5064 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ்
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர், **ரூ. 98,565/–**

சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஒர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். ரூ. 1,07,810/—

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1262 அனுமதி வழங்கப்பட்டது.**

**41.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43H5058 வாகனம் பழுது செய்ய கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லம்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்
   ஒர்க்ஸ் ஷாப் கார்னர், ரூ. 98,565/—
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர். ஸ்ரீ ஜோதி முருகன் ஒர்க்ஸ்,
   சங்கர் நகர், சேலம். ரூ. 1,07,810/—

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1263 அனுமதி வழங்கப்பட்டது.**

**42.** உதகமண்டலம் நகராட்சி பொது நலப்பிரிவில் பணியாற்றும் துப்புறவு பணியாளர்கள் ஆண் துப்புறவு பணியாளர்கள், நபர்கள் மற்றும் பெண் துப்புறவு பணியாளர்கள், நபர்கள் மொத்தம் 171 நபர்களுக்கு 2019—2020 ஆம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய கம்பூட்டுகள், கையுரைகள், ரெயின் கோட்டுகள் ஒளிர்ஜாக்கெட்டுகள் மற்றும் முககவசம், தலைகவசம், போன்ற பாதுகாப்பு உபகாரணங்கள் வாங்கி வழங்க தோராய செலவினம் ரூபாய்.**9,90,000/—** (ஒன்பது லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1264 அனுமதி வழங்கப்பட்டது.**

**43.** நீலகிரி மாவட்டம் ஆட்சித் தலைவரின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுரைக் கிணங்க, உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் ஆள் சப்ளை மூலம் பணிபுரியும் துப்புறவு பணியாளர்கள் 150 நபர்களுக்கு பாதுகாப்பு உபகாரணங்கள் வழங்க வேண்டுமென அறிவுரை வழங்கியுள்ளார். மொத்த பணியாளர்கள் 150 நபர்களுக்கு கம்பூட்டுகள், கையுரைகள், ஒளிர்ஜாக்கெட்டுகள், முககவசம், தலைகவசம் போன்ற பாதுகாப்பு

உபகாரணங்கள் வாங்க வழங்க வேண்டி உள்ளதால் தோராயம் ரூ.9,90,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1265 அனுமதி வழங்கப்பட்டது.**

**44.** பொதுநலப்பிரிவு துப்புறவு பணியாளர்களுக்கு பணிக்கு தேவையான சுண்ணாம்பு தூள், பிளிச்சிங் பவுடர், லெமன் கிராஸ் ஆயில் கிருமிநாசினி பொருட்கள் வாங்கி வழங்க துப்புறவு ஆய்வாளர்களிடமிருந்து குறிப்பு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பொருட்கள் வாங்க தோராய செலவினம் ரூபாய்.9,90,000/– (ஒன்பது லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1266 அனுமதி வழங்கப்பட்டது.**

**45.** பொது நலப்பிரிவு 1 முதல் 7 பிளவுகளுக்கு (2019–2020) ஆம் ஆண்டிற்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்கி வழங்க துப்புறவு ஆய்வாளர்களிடமிருந்து குறிப்பு பெறப்பட்டுள்ளது. எனவே தளவாட பொருட்கள் வாங்க தோராய செலவினம் ரூ.9,90,000/– (ஒன்பது லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்**

**தீர்மானம் எண்: 1267 அனுமதி வழங்கப்பட்டது.**

**46.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.9ல் உள்ள கீரின் பீல்டு பகுதியில் குடிநீர் குழயிகள் அதிக அளவில் கால்வாயில் அமைக்கப்பட்டு உள்ள 2 குடிநீர் குழாயில் இருந்து தான் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கால்வாயில் அமைக்கப்பட்டு உள்ள குடிநீர் குழாயினால் வரும் தண்ணீரை பயன்படுத்தும் பொதுமக்களுக்கு காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படுகிறது. மேலும் கால்வாயில் அமைக்கப்பட்டு உள்ள குழாயில் உடைப்பு ஏற்பட்டால் அதனை சரி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் தண்ணீர் விநியோகம் தடைபடுகிறது. இதனால் மேற்கண்ட இடங்களில் கால்வாயில் உள்ள குடிநீர் குழாயினை மாற்றி குடியிருப்பு பகுதிக்குள் அமைப்பது அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.35/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1268 அனுமதி வழங்கப்பட்டது.**

**47.** இந்நகராட்சிக்கு உட்பட்ட மிக முக்கியமான சாலைகளும் மற்றும் மார்லிமந்து சாலையும் மழையினால் அரிக்கப்பட்டு மிகவும் மோசமாக உள்ளதால் வாகனங்கள் சென்று வரும் போது மிகவும் சிரம்மமாக உள்ளதாலும், மேலும் மார்லிமந்து சாலையானது வருகின்ற மே மாதம் நடைபெற உள்ள சீசன் காலங்களில் ஒரு வழிச்சாலையாக மாற்றப்பட உள்ளது. இதனால் மேற்கண்ட சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதால் வாகனங்கள் அதிக அளவில் செல்லும் போது போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஏனவே மேற்கண்ட நகரின் முக்கிய சாலைகளில் உள்ள குழிகளுக்கு தார் ஒட்டும் பணி செய்ய வேண்டியது அவசியம் ஆகிறது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1269 அனுமதி வழங்கப்பட்டது.**

**48.** இந்நகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் பார்சன்ஸ் வேலி திட்டத்தில் 1 MGD மற்றும் 2 MGD திட்டங்களின் பிரதான குழாய்கள் மூலமாக நகரத்திற்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. 1MGD மற்றும் 2 MGD திட்டங்களில் 300 mm & DI குழாய்கள் மற்றும் 400 mm & DI குழாய்கள் ஆங்காங்கே உடைந்துள்ளதால் அதிக அளவிலான குடிநீர் வீணாகிறது. இதனால் நகர் பகுதிக்கு சீராக குடிநீர் விநியோகிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வின்போது பழுதடைந்துள்ள குடிநீர் பிரதான குழாய்களை உடனே சரி செய்ய அறிவுறுத்தியதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1270 அனுமதி வழங்கப்பட்டது.**

**49.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் : 28 ல் முள்ளிக்கொரையில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியின் வளாகத்தில் பழைய மிகவும் பழுதடைந்த உபயோகப்படுத்த முடியாத நிலையில் கழிப்பிடம் ஒன்று உள்ளது. மாணவ, மாணவியர் உபயோகத்திற்கு நல்ல நிலையில் கழிப்பிடம் ஒன்று உள்ளது. எனவே பழுதடைந்த கழிப்பிடத்தினால் ஏற்படும் சுகாதாரச் சீர்கெட்டினை தவிர்க்கும் பொருட்டு பழுதடைந்துள்ள கழிப்பிடத்தினை மாணவ, மாணிவியர் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி படிப்பகமாக மாற்ற ரூ.9.00/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உள்ளது. இப்பணியினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1271 அனுமதி வழங்கப்பட்டது.**

**50.** நகராட்சி எல்லைக்குட்பட்ட வெஸ்ட்பரி சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான விருந்நினர் மாளிகையில் உள்ள அறை மிகவும் பழுதடைந்துள்ளதால் விருந்தினர்கள் தங்குவதற்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. ஆந்த அறையின் கூரை, தரைதளம் மற்றும் மின் வசதி குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் தற்பொழுது கோடைகாலம் நெருங்கி வருவதால் அரசு உயர் அதிகாரிகள் தங்குவதாலும் அக்கட்டிடத்தை சீர் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,95,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1272 அனுமதி வழங்கப்பட்டது.**

**51.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சியால் நடத்தப்படும் விழாக்களுக்கு Amplifier மைக், ஸ்பீக்கர் மற்றும் மின் சாதன உதிரி பாகங்கள், ஆகிய பொருட்கள் வெளிச் சந்ததையில் ஒவ்வொரு முறையும் வாடகைக்கு பெறப்பட்டு விழா நடத்தப்படுகிறது. சில சமயம் வெளிச் சந்தையில் பெறப்படும் மைக் சரிவர வேலை செய்தில்லை. எனவே மேற்கண்ட பொருட்களை நகராட்சி வசம் வாங்கி நகராட்சியால் நடத்தப்படும் விழாக்களுக்கு பயன்படுத்தும் வண்ணம் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,85,000/–

பொருட்களை நகராட்சி பொது நிதிகளில் வாங்குவதற்கு நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1273 அனுமதி வழங்கப்பட்டது.**

**52.** இந்நகராட்சிக்கு உட்பட்ட RK Puram சாலையில் நகராட்சி பம்ப் ஹவுஸ் அருகில் தார்சாலையில் உள்ள மேன்ஹோல் மற்றும் பைப்லைன் பழுதடைந்து உள்ளதால் கழிவு நீர் ஆனது தார்சாலையில் செல்வதால் அருகில் குடியிருப்பவர்களுக்கு துாநாற்றம் வீசுவதுடன் தார் சாலையும் மோசமடைந்து உள்ளது. மேலும் இச்சாலை வழியாக வாகனங்கள் செல்ல முடியாமல் வாகன ஓட்டிகள் மிகவும் சிரம்மப்படுகின்றனர். ஏனவே மேற்கண்ட இடத்தில் உள்ள உடைந்த மேன்ஹோல் பைப்லைன் மற்றும் தார்சாலையில் கான்கிரிட் ஆகியவற்றை மாற்றி அமைப்பது அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.90/—** இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1274 அனுமதி வழங்கப்பட்டது.**

**53.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பஸ்நிலையம் அம்மா உணவகம் அருகில் R.O. Plant அமைக்கும் பணிக்கு ரூ.**2,75,000/—** மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர மன்ற தீர்மான எண்.**707**, நாள்.**14.08.2015—**ல் அனுமதி பெறப்பட்டு **17.08.2015—**ல் பணி உத்தரவு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் மண் வேலைகள், அஸ்திவாரம், கருங்கல் கட்டுமானம், கம்பி கட்டும் பணிகள், Rcc 1:1 ½ :3 சென்ட்ரிங் ஆகிய இனங்கள் சேர்த்து புதிய கட்டிடம் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் வருவாய் துறையினருக்கு சொந்தமானதால் பணி மேற்கொள்ள இயல வில்லை. எனவே அம்மா உணவகத்திற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள RCC தரைமட்ட நீர் தேக்க தொட்டியின் மேல் செங்கல் கட்டுமானம் கட்டுவதற்கும், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் GST இனம் ரூ.**33,000/—** சேர்க்கப்படாத காரணத்தால் மதிப்பீட்டு தொகை ரூ.**2.75** இலட்சத்திற்குள் GST சேர்த்து வழங்கவும், திருத்திய மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கவும் நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1275 அனுமதி வழங்கப்பட்டது.**

**54.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பஸ்நிலையம் அம்மா உணவகம் அருகில் R.O. Plant அமைக்கும் பணிகளுக்கு ரூ.**4.25** இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண்.**706**, நாள்.**14.08.2015—**ல் ஒப்புதல் பெறப்பட்டு **17.08.2015—**ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் GST 18% ரூ.**76,500/—** சேர்க்கப்பட வில்லை. எனவே GST 18% தொகை ரூரூ**76,500/—** வழங்கும் பொருட்டு நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1276 அனுமதி வழங்கப்பட்டது.**

**55.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை சாலையில் **2**” & விட்டமுள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் **10**”& விட்டமுள்ள AC பிரதான குழாய்கள் பழுதடைந்துள்ளதால், குடிநீர் விநியோகத்தின் போது அதிக அளவிலான குடிநீர் வீணாகிறது. எனவே

பழுதடைந்துள்ள 2” & குடிநீர் GI குழாய்கள், உதிரிபாகங்கள் மற்றும் 10” & AC பிரதான குழாய்களை சீரமைக்க MS Clamp செய்யும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,75,000/–க்கு பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1277 அனுமதி வழங்கப்பட்டது.**

**56.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் **18–**ல் ஒக்கலிகர் கல்யாண மண்டபம் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகளுக்கு ரூ.**4.85** இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண் 1040/29.12.15–ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் GST இனத்திற்கு 12 % சேர்க்கப்பட வில்லை. எனவே GST இனத்திற்கு ரூ.**58,200/–** (ரூபாய் ஐம்பத்தி எட்டாயிரத்து இறுநூறு) மட்டும் வழங்கும் படி நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1278 அனுமதி வழங்கப்பட்டது.**

**57.** இந்நகராட்சியில் **36** வார்டுகளில் பட்டியலில் கண்டுள்ள தொழில்வரிகள் சம்பந்தப்பட்ட தொழில் நடத்தும் தொழில்களுக்கு (Traders) தகுந்தாற்போல் தொழில் வரி விதிக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் கண்டுள்ளவாறு கணினியில் பதிவாகியுள்ளது. தொழில் நடத்துபவர் தற்பொழுது அந்த இடத்தில் தொழில் நடத்துவதில்லை. அதனால் கீழ்கண்ட விவரங்களின் படி தொழில்வரி வசூலிக்கப் படாமல் நிலுவையுள்ளது.

**பட்டியல்**

| வ.எண் | இனம் | எண்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Double Entry | 92 | 31360 |
| 2 | Invalid | 44 | 0 |
| 3 | Shifted | 129 | 176870 |
| 4 | Closed | 5 | 359436 |
| 5 | Crackers Shop | 11 | 21610 |
| | **Total** | **281** | **589276** |

இவ்வினத்தில் தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டு கணினியில் பதிவாகியுள்ளது. மேலும் பல தொழில்வரி விதிப்பு எண்கள் ஏற்கனவே ஒரு பெயரில் தொழில்வரி விதிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அதே பெயரில் திரும்பவும் தொழில்வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ்வினத்திலும் தொடர்ந்து கேட்பு கணினியில் எழுப்பப்பட்டுள்ளதால் தொழில்வரி வசூலிக்ககூடிய சாத்தியம் இல்லாத காரணத்தால் மேற்படி பட்டியலில் காணும் தொழில்வரி நிலுவையாக **31.03.2019** வரை உள்ள தொகை ரூ.**589276/–**ஐ கணினியிலிருந்து நீக்கம் செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.அ5/8660/2019)**

**தீர்மானம் எண்: 1279 அனுமதி வழங்கப்பட்டது.**

**58.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை உள்ளது. மேலும் பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2,250 தனிநபர் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. இதனால் நகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் உள்ள பாதாள சாக்கடை பணியை அடைப்பு நீக்கம் செய்ய நகராட்சியில் மொத்தம் 12 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். இதனால் பாதாள சாக்கடை புகார் அதிகமான வந்துகொண்டு உள்ளது. எனவே தற்சமயம் கூடுதலாக தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்துகொள்ள நகர்மன்ற தீர்மான எண்.1060 நாள்.29–09–2018 ல் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு அனுமதி பெற்று பிப்ரவரி 2018 முதல் பிப்ரவரி 2019 வரை பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட ஒப்பந்த காலம் பிப்ரவரி 2019 ல் முடிவடைவதால் மேலும் கூடுதலாக ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த பணிகள் பிப்ரவரி 2019 முதல் பிப்ரவரி 2020 வரை மேற்படி ஒப்பந்த பணி திருவாளர்.குளோபல் எண்விராய்ண்மென்ட் சிஸ்டம் அவர்களுக்கு காலநீட்டிப்பு செய்யவும் அதே விலை விகிதம் ரூ.15.00 இலட்சத்திற்கு (Indlude GST) பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1280 அனுமதி வழங்கப்பட்டது.**

**59.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட புதுமந்து சாலையில் காவல் நிலையம் அருகில் தூய்மை இந்தியா திட்டம் 2017–18 திடக்கழிவு மேலாண்மையில் 2 டன் கொள்ளளவுடன் MCC அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திரு.நாகராஜ் என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணிகள் துவங்கும் சமயத்தில் அப்பகுதி வாழ் பொதுமக்கள் பணியினை துவங்கக் கூடாது என பெரிய அளவில் சாலை மறியல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனவே இந்த இடத்திற்கு பதிலாக இங்கிருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள செல்வவிநாயகர் காலணி பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் உயரமாக உள்ள மண் திட்டினையும், பழுதடைந்து உள்ள உபயோகமற்ற நிலையில் உள்ள பொது கழிப்பிடத்தினை அகற்றி விட்டு அவ்விடத்தில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் அமைக்கலாம். இதற்கு மன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெறலாம். பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம். அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் எண்: 1281 அனுமதி வழங்கப்பட்டது.**

**தனி அலுவலர், மற்றும்**
**ஆணையாளர்.**
**உதகமண்டலம் நகராட்சி.**